RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS

Dr M. Rajkumar MBBS MS DNB MCH (vascular) **98410 25996**	Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari MS (Opthal) DO MBA **9444 288784**	Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar MBBS MS FMAS **9445 401793**	Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R MBBS MS MCH (vascular) **9884 650945**	Sr Vascular Surgeon
Dr Salins R MBBS MD **87780 87742**	General Physician
Dr Praveena E MBBS MS (ENT) **9944 100443**	Sr ENT Surgeon

தமிழ் மக்கள் குரல்

தமிழ் மக்கள்

tamilmakkalkurall@gmil.com

RNI No. : TNTAM24840

தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE

ALL ONLINE SERVICES

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்

8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 4 பக்கங்கள் சென்னை, 3 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 114

கூட்டுறவு நிறுவன பணியாளர்களுக்கு 20% வரை தீபாவளி போனஸ், கருணை தொகை வழங்கப்படும்: தமிழக அரசு அறிவிப்பு!



சென்னை – 3 நவம்பர், 2026 தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் உள்ளன. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அனைவருக்கும் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் 2025-2026ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் ஒதுக்கீட்டு உபரி உள்ள சுப்ரமணிய சிவா மற்றும் கள்ளக்குறிச்சி || ஆகிய இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் மிகை ஊதியமாக 8.33% மற்றும் கருணைத் தொகையாக 11.67% என மொத்தம் 20% போனஸ் வழங்கவும், மீதமுள்ள 14 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு மிகை ஊதியமாக 8.33% மற்றும் கருணைத் தொகையாக 1.67% என மொத்தம் 10% போனஸ் வழங்கவும் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் மூலம், தமிழ்நாட்டில் உள்ள 16 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் சுமார் 5190 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெறுவர். மேலும், மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்க ரூ.351.40 இலட்சம் செலவினம் ஏற்படும்.

சிறுமிகளுக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்த வழக்குகளில் கைதாகியுள்ள Gem Granite வீரமணிக்கு உதவிய Watchman சீனிவாசன் என்பவர் கைது



சென்னை – 3 நவம்பர், 2026 சிறுமிகளுக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்து அதன் பேரில் பதிவு செய்திருந்த எட்டு வழக்குகளில் கைதாகியுள்ள Gem Granite வீரமணிக்கு இருபது வருடங்களுக்கு மேலாக உதவிய Watchman ஆக வேலை பார்த்து வந்த சீனிவாசன் என்பவர் இரண்டு வழக்குகளில் கைது.

மேற்கண்ட வாட்ச்மேன் சீனிவாசன் என்பவர் ஜெம் கிரானைட் வீரமணி, சிறுமிகளிடம் பாலியல் துன்புறுத்தல் செய்வதற்காக மேற்படி சிறுமிகளை தனது வாட்ச்மேன் உதவியுடன் அவரது அறையில் உட்கார வைத்து, பின்பு வீரமணி அழைக்கும்போது சிறுமிகளை அனுப்பி வைத்துள்ளார். CCTV கேமராவின் கோணத்தை (Angle) வேறு பக்கமாக திருப்பியும் மற்றும் மின் இணைப்பை துண்டித்தும், சிறுமிகள் அறையை விட்டு செல்லும் போதும் வெளியே வரும்போதும் அவர்கள் வீட்டிற்கு வருவது CCTV கேமராவில் பதிவாகாதவண்ணம் சதி செய்துள்ளார்.

மேலும், இவ்வழக்குகள் தொடர்பாக எதிரி ஜெம் வீரமணிக்கு உதவிய சீனிவாசனின் எண்ணூரில் உள்ள வீட்டை சோதனை செய்தும், பின்பு வாட்ச்மேன் சீனிவாசனின் செல்போன் கைப்பற்றப்பட்டு தடய அறிவியல் துறைக்கு சோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

POCSO நீதிமன்ற நீதிபதி அவர்கள் மேற்படி எதிரி சீனிவாசன் என்பவரை 15 நாட்கள் நீதிமன்றக் காவலில் (Remand) வைக்க நேற்று (01.11.2026) உத்தரவிட்டார். அதன்பேரில், எதிரி சீனிவாசன் சென்னை புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

நாடு முழுவதும் டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம்

சென்னை – 3 நவம்பர், 2026 ஓய்வூதியதாரர்கள், ஓய்வூதியதாரர் நலத்துறை, நாடு முழுவதும் டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் தில்லியில் உள்ள மாநாட்டு மையத்தில் 2 நவம்பர் 2026 அன்று நடைபெற்றது.

பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சியில், ஓய்வூதியதாரர்கள், மூத்தகுடிமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இந்த முகாம், தொழில்நுட்பம் சார்ந்த, எளிதில் பயன்படுத்தக்கூடிய, ஓய்வூதியதாரர்களுக்கு உகந்த சேவைகள் மூலம், டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ்களை ' சமர்ப்பிக்க வகை செய்தது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ஓய்வூதியதாரர்கள், ஓய்வூதியதாரர் நலத்துறையின் செயலாளர் நிவேதிதா சுக்லா வர்மா, ஓய்வூதியதாரர்களை டிஜிட்டல் முறையில் வலுப்படுத்துவது, மக்களின் வாழ்க்கைச் சூழலை எளிதாக்குவதில் மத்திய அரசு அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் ஒரு முக்கிய அங்கமாகும் என்று குறிப்பிட்டார். தொழில்நுட்ப முன்னேற்றங்கள், குறிப்பாக, முக அங்கீகார ' வசதி, ஆயுள் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கும் முறையை முற்றிலும் மாற்றியமைத்துள்ளதாக அவர் கூறினார். இதன் மூலம், ஓய்வூதியதாரர்கள் வங்கிகளுக்கோ அல்லது பிற அலுவலகங்களுக்கோ நேரில் செல்ல வேண்டிய அவசியமின்றி, தங்களது ஸ்மார்ட்போன்களைப் பயன்படுத்தி, டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ்களை ' உருவாக்கிக்கொள்ள முடியும்.

பாரத் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உச்சி மாநாடு, கண்காட்சியைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

சென்னை – 3 நவம்பர், 2026 பிரதமர் நரேந்திர மோடி, பாரத் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உச்சி மாநாடு, கண்காட்சியை புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் இன்று தொடங்கி வைத்தார். மாநாட்டில் உரையாற்றிய அவர், உலக அளவில், கொவிட் -19 பெருந்தொற்று முதல் தற்போது மேற்கு ஆசியாவில் நிலவும் நெருக்கடி வரை, முன்னெப்போதும் இல்லாத பல்வேறு தடைகளை எதிர்கொண்டு வருவதை குறிப்பிட்ட பிரதமர், இத்தகைய இக்கட்டான சூழலிலும், இந்தியா பொருளாதார வளர்ச்சியை சீரான முறையில் பராமரித்து வரும் விதம் குறித்து, 140 கோடி மக்களும் பெருமிதம் கொள்வதாக கூறினார்.

உலக அளவில் எரிசக்தி நெருக்கடிகளால் சூழப்பட்ட ஒரு முக்கியமான காலகட்டத்தில் இந்த உச்சி மாநாடு நடைபெறுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய சூழல், அன்றாட வாழ்க்கை, நாட்டின் முன்னேற்றத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் முக்கியத்துவத்தை மீண்டும் ஒருமுறை உணர்த்தியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் ஒன்பதாவது கூட்டமும், பசுமை ஹைட்ரஜன் குறித்த நான்காவது மாநாடும், இந்த மாநாட்டுடன் இணைந்து நடைபெறுவதால், இந்த நிகழ்வு மிகவும் விரிவான பரிமாணத்தைக் கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மத்திய கனரகத் தொழில்துறை அமைச்சகம், அதன் பொதுத்துறை நிறுவனங்கள், தன்னாட்சி அமைப்புகள் ஆகியவை, நிலுவையில் உள்ள பணிகளை முடிப்பதற்கான சிறப்பு முகாம் 6.0-ஐ நிறைவு செய்துள்ளன

சென்னை – 3 நவம்பர், 2026 மத்திய கனரகத் தொழில்துறை அமைச்சகம், அதன் கீழ் இயங்கும் மத்திய பொதுத்துறை நிறுவனங்கள், தன்னாட்சி அமைப்புகள் ஆகியவை, நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடிப்பதற்கான சிறப்பு இயக்கம் 6.0-ஐ வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளன.

இந்த ஆண்டு, தூய்மையைப் பேணுதல், நிலுவையில் உள்ள பணிகளைக் குறைத்தல், பணியிட மேலாண்மையை மேம்படுத்துதல், மின்னணுக் கழிவுகளை முறையாகச் சேகரித்தல், வகைப்படுத்துதல், அகற்றுதல் ஆகியவற்றிற்கு இந்த இயக்கம் கூடுதல் முக்கியத்துவம் அளித்தது.

2026- ம் ஆண்டு அக்டோபர் 2 முதல் அக்டோபர் 31 வரை நடைபெற்ற இந்த சிறப்பு இயக்கம் 6.0- ன் போது, பழைய கோப்புகள் (காகித வடிவம் மற்றும் மின்னணு வடிவம்) குறித்த விரிவான ஆய்வு, பயன்பாடற்ற பொருட்கள், பழைய இரும்புக் கழிவுகள், மின்னணுக் கழிவுகளைக் கண்டறிதல், அவற்றை முறையாக அகற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும்.

இத்தகைய செயல்பாடுகளின் நோக்கம், அலுவலக இடங்களை விடுவித்தல், ஆவண மேலாண்மையை மேம்படுத்துதல், தூய்மையான, நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, திறமையான பணியிடச் சூழலை உருவாக்குதல் ஆகும்.

தொலைத்தொடர்பு வாடிக்கையாளர்களின் புகார்களுக்குத் தீர்வு காண்பதற்கான (நான்காவது திருத்த) ஒழுங்குமுறை விதிகளை ட்ராய் வெளியிட்டுள்ளது

சென்னை – 3 நவம்பர், 2026 தொலைத்தொடர்பு வாடிக்கையாளர்களின் புகார்களுக்குத் தீர்வு காண்பதற்கான (நான்காவது திருத்த) ஒழுங்குமுறை விதிகளை இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (ட்ராய்), இன்று வெளியிட்டுள்ளது.

புகார்கள் மீது தீர்வு காண்பதற்கான கட்டமைப்பை மேம்படுத்துவது குறித்த ஆட்சேபனைகளை முறையே 2026 ஜூன் 12,19 ஆகிய தேதிகளுக்குள் சமர்ப்பிக்குமாறு ட்ராய் கேட்டுக் கொண்டுள்ளது. சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து மொத்தம் 32 கருத்துகளும், 24 ஆட்சேபனைகளும் பெறப்பட்டு, அவை ட்ராய் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 2026 ஜூலை 17 அன்று இணையவழியில் வெளிப்படையான ஆலோசனைக் கூட்டமும் நடத்தப்பட்டது. இந்தத் திருத்தங்கள், வாடிக்கையாளர் புகார் தீர்வு கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துகின்றன.

அதிகரித்து வரும் தேவைகளைக் கருத்தில் கொண்டு, இந்த வரைவு ஆவணத்தை 2026- ம் ஆண்டு மே மாதம் 7- ம் தேதியன்று வெளியிட்டது.

இது குறித்த கருத்துக்கள்,

HOPES Trust
மாற்றம் என்பது சொல் அல்ல செயல்

MY ARK CENTRE
for Intellectual Disability
அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளி
ரெட்டணை ரோடு,
ரயில்வே கேட் அருகில்,
தென்பசியார், திண்டிவனம்-604302
9790439935

மீளுருவாக்க மருத்துவ ஆராய்ச்சிக்காக QR678® நிறுவனத்துக்கு சர்வதேச அங்கீகாரம்



சென்னை – 3 நவம்பர், 2026 சென்னை: இந்தியாவில் உருவான முடி அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் தளமான QR678®, முடி அறிவியல் மற்றும் மீளுருவாக்க மருத்துவத் துறையில் முன்னோடி கண்டுபிடிப்புகளுக்காக வழங்கப்படும் மதிப்புமிக்க DASIL விருதைப் பெற்றுள்ளது. கேரள மாநிலம் கொச்சியில், அக்டோபர் 22 முதல் 24 வரை நடைபெற்ற 14-வது DASIL உலக மாநாட்டில் இந்த விருது வழங்கப்பட்டது.

தோல் மருத்துவம் மற்றும் அழகியல் அறுவை சிகிச்சைக்கான சர்வதேசக் கூட்டமைப்பான DASIL சார்பில் வழங்கப்பட்ட இந்த விருது, முடி அறிவியல், மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மீளுருவாக்க மருத்துவத் துறைகளில் QR678® ஆற்றிவரும் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் அமைந்துள்ளது. QR678® நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவர் இந்திரஜித் தத்தா, அந்நிறுவனத்தின் அறிவியல், மருத்துவம் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களுடன் இணைந்து இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

மருத்துவ விஞ்ஞானிகளான டாக்டர் நிங்கி கபூர் மற்றும் டாக்டர் தேப்ராஜ் ஷோம் ஆகியோரின் வழிகாட்டுதலில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட QR678® தளம், முடி மற்றும் உச்சந்தலை ஆரோக்கியம் குறித்த மேம்பட்ட புரிதலை உருவாக்கும் நோக்கில் மருத்துவ ஆராய்ச்சி, மூலக்கூறு உயிரியல், உயிரித் தொழில்நுட்பம் மற்றும் மீளுருவாக்க மருத்துவம் ஆகிய துறைகளை ஒருங்கிணைக்கிறது.

இந்த அங்கீகாரம் குறித்துப் பேசிய இந்திரஜித் தத்தா, இந்த விருது விஞ்ஞானிகள், மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த அங்கீகாரம் என்றும், அறிவியல் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தில் தொடர்ந்து முதலீடு செய்வதற்கான ஊக்கமாக இது அமையும் என்றும் தெரிவித்தார்.

2026-ஆம் ஆண்டில் மட்டும் QR678® ஆராய்ச்சியாளர்கள் 19 அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடும் பணியை நிறைவு செய்ததுடன், ஒரு காப்புரிமையையும் பெற்றுள்ளனர். இத்தளத்தின் அறிவுசார் சொத்துரிமைக் காப்புரிமைப் பட்டியலில் மூன்று சர்வதேசக் காப்புரிமைகள் இடம்பெற்றுள்ளன. மேலும், உலகளவில் 25 காப்புரிமை விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

இதுவரை 36-க்கும் மேற்பட்ட மருத்துவ ஆய்வுக் கட்டுரைகள், 10-க்கும் மேற்பட்ட நாடுகளில் தயாரிப்புகளுக்கான ஒப்புதல்கள், 5,000-க்கும் மேற்பட்ட மருத்துவர்களைக் கொண்ட வலையமைப்பு மற்றும் 1.5 லட்சத்துக்கும் அதிகமான நோயாளிகளுடனான தொடர்பு ஆகியவற்றின் மூலம், முடி அறிவியல் மற்றும் மீளுருவாக்க மருத்துவத் துறையில் தனது சர்வதேசச் செயல்பாடுகளை QR678® தொடர்ந்து விரிவுபடுத்தி வருகிறது.



ஹீரோ மோட்டோகார்ப், 'ஹீரோ சாங் தியோஹர் ஹை ஹர் கஹின்' மூலம் பண்டிகை ஆரவாரத்தைக் கொண்டுவருகிறது

CHENNAI – 3 நவம்பர், 2026 பண்டிகைக் கொண்டாட்டத்தை மேலும் ஒரு படி மேலே கொண்டு செல்லும் வகையில், உலகின் மிகப்பெரிய மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் தயாரிப்பு நிறுவனமான ஹீரோ மோட்டோகார்ப், இந்தியா முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களுக்காக 'ஹீரோத்சவ்' என்ற நான்கு நாள் சிறப்பு பண்டிகைக்கால சலுகைகளையும் அற்புதமான வெகுமதிகளையும் அறிவித்துள்ளது. நவம்பர் 1 முதல் நவம்பர் 4, 2026 வரை நடைபெறும் இந்த முன்னெடுப்பு, நிறுவனத்தின் நாடு தழுவிய 'ஹீரோ சங் தியோஹர் ஹை ஹர் கஹின்' என்ற பண்டிகைக்கால பிரச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு, தங்கள் பண்டிகைக் காலத்தை மறக்க முடியாததாக மாற்ற விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு மேலும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனம் தனது மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் பிரிவுகளில் புதிதாக அறிமுகப்படுத்திய மற்றும் மேம்படுத்திய 12 மாடல்களுக்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அபார வரவேற்பு கிடைத்துள்ளது. டீலர்ஷிப்களில் ஏற்பட்டுள்ள பெரும் தேவை மற்றும் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிப்பு ஆகியவை பண்டிகைக் கால உற்சாகத்தை மேலும் கூட்டியுள்ளன.

'ஹீரோத்சவ்' (Herotsav) மூலம், புதிய தொடக்கங்களுக்கான இந்த காலக்கட்டத்தை இன்னும் சிறப்பானதாக மாற்றவும், வாடிக்கையாளர்கள் தங்களுக்குப் பிடித்தமான ஹீரோ இருசக்கர வாகனத்தை வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்கு கூடுதல் ஊக்கத்தை அளிக்கவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

நான்கு நாள் ஹெரோத்சவ கொண்டாட்டத்தில், பின்வருவனவற்றை உள்ளடக்கிய பல அற்புதமான சலுகைகள் இடம்பெற்றுள்ளன.:

தினசரி வெகுமதிகள்: ஹீரோ இருசக்கர வாகனங்கள், தங்க நாணயங்கள் மற்றும் பிற உறுதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

சிறப்பு சில்லறை நிதிச் சலுகைகள்: 100% வரை நிதியுதவி, ₹2222 முதல் தொடங்கும் மாதத் தவணை (EMI) மற்றும் வட்டியில்லா மாதத் தவணை (In Cost EMI) ஆகியவை வாடிக்கையாளர்கள் தங்களுக்கு விருப்பமான இருசக்கர வாகனத்தை எளிதாக வீட்டிற்கு கொண்டு வர உதவுகின்றன.

கிரெடிட் கார்டு கேஷ்பேக்: தேர்ந்தெடுக்கப்பட்ட கிரெடிட் கார்டுகளில் ₹10,000 வரை உடனடி கேஷ்பேக்.

நிறுவனச் சலுகைகள்: தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்களில் ₹6,000 வரை சேமிப்பு

இந்த முன்னெடுப்பு குறித்து கருத்து தெரிவித்த ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனத்தின் இந்திய வணிகப் பிரிவின் தலைமை வணிக அதிகாரி அஷுதோஷ் வர்மா, "இந்த பண்டிகைக் காலத்தில் எங்கள் வாடிக்கையாளர்கள் ஹீரோ மோட்டோகார்ப் மீது காட்டியுள்ள மகத்தான நம்பிக்கை மற்றும் உற்சாகத்தால் நாங்கள் உண்மையிலேயே நெகிழ்ந்துள்ளோம். எங்களின் 12 புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட மாடல்களுக்குக் கிடைத்த வரவேற்பு மிகச் சிறப்பாக உள்ளது. இது எங்கள் தயாரிப்பு வரிசையின் வலிமையையும், நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களுடனான எங்கள் நீடித்த தொடர்பையும் பிரதிபலிக்கிறது. ஹீரோ இருசக்கர வாகனத்தை வீட்டிற்கு கொண்டு வர விரும்புபவர்களுக்கு சிறப்புச் சலுகைகள்



மற்றும் அற்புதமான பலன்களுடன், இந்த பண்டிகைக் கால உற்சாகத்தை இன்னும் பலனளிக்கும் அனுபவமாக மாற்றுவதற்கான எங்கள் வழிதான் ஹீரோத்சவ். பண்டிகைக் கால உற்சாகம் உச்சத்தில் இருப்பதாலும், நாடு முழுவதும் தேவை வலுவாக இருப்பதாலும், இந்த முன்னெடுப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்." என்றார். எங்கள் விற்பனை நிலையங்களில், நான்கு நாட்கள் நீடிக்கும் இந்தச் சிறப்பான கொண்டாட்டத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளுமாறு வாடிக்கையாளர்களை அழைக்கிறோம்.

வாடிக்கையாளர்கள் தங்களுக்கு அருகிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஹீரோ மோட்டோகார்ப் விற்பனையகத்திற்குச் சென்றோ அல்லது நிறுவனத்தின் டிஜிட்டல் சில்லறை விற்பனைத் தளம் வழியாக முன்பதிவு செய்தோ 'ஹெரோத்சவ்' சலுகைகளைப் பெறலாம். இந்தச் சிறப்புச் சலுகைகள் நவம்பர் 1 முதல் நவம்பர் 4, 2026 வரையிலான குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே கிடைக்கும்.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பயணிகளை ஏற்றுவதில் பஸ் டிரைவர்கள் மோதல்

சென்னை – 3 நவம்பர், 2026 சென்னை வண்டலூர் அருகே ஊரப்பாக்கம் ஜிஎஸ்டி நெடுஞ்சாலை ஓரத்தில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் இயங்கி வருகிறது. இங்கு வட மற்றும் தென்மாவட்டங்களுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான அரசு பேருந்துகள், விரைவு பேருந்துகள் மற்றும் ஆம்னி பேருந்துகள் சென்று வருகின்றன. இதேபோல் சென்னை, செங்கல்பட்டு உள்பட பல்வேறு புறநகர் பகுதிகளில் இருந்து மாநகர பேருந்துகளும் வந்து செல்கின்றன.

இந்நிலையில், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இன்று காலை 6வது நடைமேடை மற்றும் 7வது நடைமேடையில் அரசு பேருந்துக்கு காத்திருந்த ஏராளமான பயணிகளை, திருவண்ணாமலைக்கு செல்லும் அரசு பேருந்துகளின் டிரைவர்கள் போட்டி போட்டு அழைத்தனர். இதனால் இருதரப்பு அரசு பேருந்து டிரைவர்களுக்கு இடையே வாக்குவாதம் முற்றியதில் கைகலப்பு மற்றும் மோதல் ஏற்படும் சூழல் ஏற்பட்டது. பின்னர் சக அரசு பேருந்து டிரைவர்கள் ஓடிவந்து, வாக்குவாதத்தில் ஈடுபட்ட டிரைவர்களை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர். இதனால் அங்கு பரபரப்பு



நிலவியது.

ரூ.5 கோடி லஞ்சப் புகார்: அமைச்சர் மீது நடவடிக்கை கோரி DVAC-ல் புகார்!

சென்னை – 3 நவம்பர், 2026 கடந்த நவம்பர் 1ஆம் தேதி சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழாவில் பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் ராஜ்மோகன் பேசும்போது, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் பதவியைப் பெற்றுத் தருவதற்காக தனக்கு ரூ.5 கோடி வழங்க ஒருவர் முன்வந்ததாகவும், அந்தத் தகவலை லயோலா மணி தன்னிடம் தெரிவித்ததாகவும் கூறியிருந்தார்.

மேலும், இந்த விவகாரத்தில் முதலமைச்சர் தளபதி தகுதியற்ற ஒருவருக்கு எந்தப் பதவியையும் வழங்க மாட்டார் என்றும், தகுதியின் அடிப்படையில் புஷ்பவனம் குப்புசாமிக்கு எந்தவிதப் பணமும் பெறாமல் அந்தப் பதவி வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். அமைச்சரின் இந்தப் பேச்சு தொடர்பான காணொளி சமூக வலைதளங்களில் பரவலாகப் பகிரப்பட்டது.

இந்நிலையில், அமைச்சர் ராஜ்மோகனின் பொதுவெளிப் பேச்சை அடிப்படையாகக் கொண்டு, திமுக சட்டப்பிரிவு இணைச் செயலாளர் ஐ. பரந்தாமன், நவம்பர் 2ஆம் தேதி தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநரிடம் புகார் அளித்துள்ளார்.

அந்தப் புகாரில், ரூ.5 கோடி லஞ்சம் வழங்க முன்வந்த நபர் யார் என்பதை இதுவரை வெளிப்படுத்தவில்லை என்றும், அமைச்சர் ராஜ்மோகன் மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் லயோலா மணி ஆகியோருக்குத் தெரிந்தே இந்தத் தகவல் பரிமாறப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், லஞ்சம் வழங்க முன்வந்த நபர், லயோலா மணி மூலமாக அமைச்சரை அணுகியதாக அமைச்சரின் பேச்சிலிருந்து தெரியவருவதாகவும், இந்த விவகாரம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் முன்கூட்டியே லஞ்ச ஒழிப்புத்துறையிடம் புகார் அளிக்காமல் இருந்தது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஊழல் தடுப்புச் சட்டம் 1988-ன் பிரிவுகள் 8 மற்றும் 12, பாரதிய நியாய சன்ஹிதா சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகள் மற்றும் விசாரணையில் தெரியவரும் பட்சத்தில் பிரிவு 7A ஆகியவற்றின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும் என புகாரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜ்மோகன், லயோலா மணி மற்றும் ரூ.5 கோடி வழங்க முன்வந்ததாகக் கூறப்படும் அடையாளம் தெரியாத நபர் ஆகியோரிடம் விசாரணை நடத்தி, லஞ்சம் வழங்க முன்வந்த நபரின் அடையாளம், சம்பவம் நடைபெற்ற தேதி, இடம் மற்றும் அதன் பின்னணி ஆகியவற்றைக் கண்டறிய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

மேலும், நவம்பர் 1ஆம் தேதி நடைபெற்ற அரசு விழாவில் அமைச்சர்



பேசியதன் அசல் மற்றும் திருத்தப்படாத காணொளிப் பதிவுகளைப் பாதுகாக்க வேண்டும். சம்பந்தப்பட்ட நபர்களுக்கு இடையிலான தொலைபேசி அழைப்பு விவரங்கள், குறுஞ்செய்திகள் மற்றும் மின்னணுத் தகவல் பரிமாற்றங்களையும் கைப்பற்றி ஆய்வு செய்ய வேண்டும் என்றும் புகாரில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் பாரபட்சமற்ற, நியாயமான மற்றும் காலவரையறைக்குட்பட்ட விசாரணை நடத்தி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டால் அதன் நகலையும் புகார்தாரருக்கு வழங்க வேண்டும் என ஐ. பரந்தாமன் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் பொதுவெளிப் பேச்சைத் தொடர்ந்து ரூ.5 கோடி லஞ்ச விவகாரம் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளிக்கப்பட்டிருப்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

Printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers, No.191, 212, Khaja Khan Bhandar Street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
Editor: R.SATHYANARAYANAN

ட்ரூ ஸ்டோரீஸ் தயாரிப்பில் ஷேன் நிகமின் அடுத்த திரைப்படம் ஏற்காட்டில் பூஜையுடன் தொடக்கம்!

சென்னை – 3 நவம்பர், 2026 ட்ரூ ஸ்டோரீஸ் தயாரிப்பில் ஷேன் நிகமின் அடுத்த திரைப்படம் ஏற்காட்டில் பூஜையுடன் தொடக்கம்! ஷாம் சூர்யா இயக்கத்தில், விஷால் வின்சென்ட் டோனி தயாரிப்பில் உருவாகும் ட்ரூ ஸ்டோரீஸ் தயாரிப்பு நிறுவனம் எண் 2 திரைப்படத்தில் ஷேன் நிகம், சத்யராஜ், ஜான் கொக்கன் மற்றும் ஃபர்ஹான் ஃபாசில் உள்ளிட்ட நட்சத்திரங்கள் இணைந்துள்ளனர்! நாளுக்கு நாள் வளர்ந்து வரும் தனது திரைப்படப் பயணத்தில் மற்றுமொரு சுவாரஸ்யமான படைப்பைச் சேர்க்கும் வகையில், நடிகர் ஷேன் நிகமின் அடுத்த திரைப்படம் அழகிய மலைவாசஸ்தலமான ஏற்காட்டில் நடைபெற்ற பாரம்பரிய பூஜையுடன் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியுள்ளது. மங்களகரமான இந்தப் பூஜை நிகழ்வு திரைப்படத்தின் பயணத்திற்கான தொடக்கத்தைக் குறிக்கிறது. மலைப்பகுதியின் இயற்கை எழில் சூழ்ந்த பின்னணியில் படப்பிடிப்புப் பணிகளைத் தொடங்குவதற்கான ஆயத்தங்களைப் படக்குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். தற்போதைக்கு ட்ரூ ஸ்டோரீஸ் தயாரிப்பு நிறுவனம் எண் 2 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் பெயரிடப்படாத திரைப்படம், தயாரிப்பு நிறுவனத்தின் முதல் படைப்பைத் தொடர்ந்து ட்ரூ ஸ்டோரீஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகிறது. திறமையும் படைப்பாற்றலும் இணையும் சுவாரஸ்யமான படைப்பாக உருவாகவுள்ள இப்படத்தில் ஷேன் நிகம், மூத்த நடிகர் சத்யராஜ், ஜான் கொக்கன் மற்றும் ஃபர்ஹான் ஃபாசில் உள்ளிட்ட நட்சத்திரங்கள் இணைந்துள்ளனர். இந்த நடிகர்களின் கூட்டணி ஏற்கெனவே ஆர்வத்தைத் தூண்டியுள்ளது. இதனால் எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் சுவாரஸ்யமான திரைப்படங்களில் ஒன்றாக இப்படம் அமைந்துள்ளது. ஷேன் நிகமைப் பொறுத்தவரை, இந்தத் திரைப்படம் அவரது திரைப்பயணத்தில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைகிறது. பல்வேறு கதாபாத்திரங்களை நம்பகத்தன்மையுடனும் தீவிரத்துடனும் வெளிப்படுத்தும் திறனுக்காக அறியப்படும் அவர், தொடர்ந்து பல்வேறு திரையுலகங்களில் சுவாரஸ்யமான கூட்டணிகளையும் நம்பிக்கையளிக்கும் கதைக்களங்களையும் தேர்ந்தெடுத்து வருகிறார். சத்யராஜ் மற்றும் ஜான் கொக்கன் போன்ற அனுபவமிக்க நடிகர்களுடன் இணைந்து, ஃபர்ஹான் ஃபாசிலுடனும் திரையைப் பகிர்ந்துகொள்வது இந்தப் புதிய திரைப்படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரிக்கிறது. ஷாம் சூர்யா இயக்கத்தில், ட்ரூ ஸ்டோரீஸ் நிறுவனத்தின் சார்பில் விஷால் வின்சென்ட் டோனி இப்படத்தைத் தயாரிக்கிறார். அனுபவமிக்க தொழில்நுட்பக் கலைஞர்களும் இப்படத்தில் இணைந்துள்ளனர். ஒளிப்பதிவை ஆஷிக் அபு மேற்கொள்கிறார். அஜனீஷ் லோக்நாத் இசையமைக்கிறார். ஸ்ரீஜித் சாரங் படத்தொகுப்புப் பணிகளைக் கவனிக்கிறார். மேலும், கலை இயக்குநராக வீரமணி கணேசன், சண்டைக் காட்சிகளின் ஒருங்கிணைப்பாளராக பிசி ஸ்டண்ட் மற்றும் ஆடை வடிவமைப்பாளராக ஏ. கவிதா ஆகியோர் பணியாற்றுகின்றனர். மேலும், ரைஃபிள் கிளப் திரைப்படத்தை உருவாக்கிய படக்குழுவிடமிருந்து இப்படம் உருவாகி வருவது எதிர்பார்ப்பை அதிகரிக்கிறது. சுவாரஸ்யமான நட்சத்திரக் கூட்டணி, நம்பிக்கையளிக்கும் தொழில்நுட்பக் குழு மற்றும் புதிய இயக்குநரின் பார்வை ஆகியவற்றுடன், ஷேன் நிகமின் வரவிருக்கும் திரைப்படங்களின் பட்டியலில் இப்படம் சுவாரஸ்யமான படைப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. திரைப்படத்தின் தலைப்பு, கதைக்களம், கூடுதல் நடிகர்கள் மற்றும் பிற விவரங்கள் குறித்த அறிவிப்புகளைப் படக்குழுவினர் உரிய நேரத்தில் வெளியிடுவார்கள்.



நடிகர்கள்: ஷேன் நிகம் சத்யராஜ் ஜான் கொக்கன் ஃபர்ஹான் ஃபாசில் பூஜா ராமச்சந்திரன் முனீஷ்காந்த் தொழில்நுட்பக் குழு: இயக்கம்: ஷாம் சூர்யா தயாரிப்பு: விஷால் வின்சென்ட் டோனி ஒளிப்பதிவு: ஆஷிக் அபு இசையமைப்பு: அஜனீஷ் லோக்நாத் படத்தொகுப்பு: ஸ்ரீஜித் சாரங் கலை இயக்கம்: வீரமணி கணேசன் சண்டைக் காட்சிகளின் ஒருங்கிணைப்பு: பிசி ஸ்டண்ட் ஆடை வடிவமைப்பு: ஏ. கவிதாஆடைப் பொறுப்பு: முதுல் ஹபீஸ் ஒப்பனை: கார்த்திக் ஹரி செயல் தயாரிப்பாளர்கள்: எம் கண்ணன், ஜான் கொக்கன் தயாரிப்பு நிர்வாகி: எஸ். சிவகுமார் தயாரிப்புக் கட்டுப்பாட்டாளர்: பிரஜீஷ் கேடிகே மக்கள் தொடர்பு: ரியாஸ் K அஹ்மத் & பாரஸ் ரியாஸ் புகைப்படங்கள்: தேனி அன்பு விளம்பர வடிவமைப்புகள்: யெல்லோடூத்ஸ்

தமிழகத்தின் பழமையான நகை நிறுவனமான VBJ, கோவையில் தனது மிகப்பெரிய ஷோரூமைத் திறந்துள்ளது



சென்னை – 3 நவம்பர், 2026 கோவை: இந்தியாவின் பாரம்பரியமிக்க நகை நிறுவனமான விபிஜே (வும்மிடி பங்காரு ஜுவல்லர்ஸ்), கோவையின் 100 அடி சாலையில் 21,000 சதுர அடி பரப்பளவில் தமிழ்நாட்டின் மிகப்பெரிய நகைக்கடையைத் திறந்துள்ளது. மூன்று தளங்களைக் கொண்ட இந்தப் புதிய நகைக்கடை, சென்னைக்கு வெளியே நிறுவனத்தின் வர்த்தக விரிவாக்கத்தில் முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது.

126 ஆண்டுகால பாரம்பரியத்தைக் கொண்ட விபிஜே, சொந்த வடிவமைப்பு மற்றும் உற்பத்தித் திறனுடன் பல்வேறு தனித்துவமான நகைத் தொகுப்புகளை அறிமுகப்படுத்தி வருகிறது. புதிய நகைக்கடையின் தரைத்தளத்தில் தங்கம், விலைமதிப்புமிக்க கற்கள் பதித்த நகைகள் மற்றும் ஜடாவ் நகைகளும், முதல் தளத்தில் வைரம், சாலிடேர் மற்றும் பிளாட்டினம் நகைகளும் இடம்பெற்றுள்ளன. கோவையில் முதன்முறையாக, அமெரிக்காவின் ஜெமாலஜிக்கல் இன்ஸ்டிடியூட் (GIA) சான்றளித்த வைர நகைகளையும் வாடிக்கையாளர்கள் இங்கு வாங்கலாம். வெள்ளி நகைகள் மற்றும் பொருட்களுக்கான தளமும், பிரத்யேக சொகுசு நகைப் பிரிவான 'Atelier by VBJ'-யும் விரைவில் திறக்கப்பட உள்ளன.

இதுகுறித்து நிறுவனத்தின் நிர்வாகப் பங்குதாரர்கள் அமரேந்திரன் வும்மிடி மற்றும் ஜிதேந்திரா வும்மிடி கூறுகையில், கோவையின் வர்த்தக வளர்ச்சியும், தரமான நகைகள் மீதான மக்களின் ஆர்வமும் இந்த விரிவாக்கத்திற்குக் காரணம் என்றும், திருமண நகைகள் முதல் வைர நகைகள் வரை விரிவான தேர்வுகளை ஒரே இடத்தில் வழங்குவதே நோக்கம் என்றும் தெரிவித்தனர்.

விழாவையொட்டி, தங்கம், வைரம், பிளாட்டினம் மற்றும் விலைமதிப்புமிக்க கற்கள் பதித்த நகைகளுக்கு சேதாரக் கட்டணம் மற்றும் மதிப்புக் கூட்டுதல் கட்டணத்தில் 20 சதவீதமும், வெள்ளி நகைகளுக்கு 10 சதவீதமும் தள்ளுபடி வழங்கப்படுகிறது. பழைய தங்கத்தை மாற்றும்போது கிராமுக்கு கூடுதலாக ரூ.125 வழங்கப்படுகிறது. மேலும், ரூ.1 லட்சம் பரிசுப் போட்டியும் நடத்தப்படுகிறது.

தமிழ்நாடு, தெலங்கானா மற்றும் அமெரிக்காவில் தனது வர்த்தகத்தை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ள விபிஜே, 2027–28 நிதியாண்டிற்குள் ரூ.5,000 கோடிக்கும் அதிகமான வருவாயை எட்ட இலக்கு நிர்ணயித்துள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோலை உருவாக்கிய பெருமையையும் கொண்டுள்ள இந்நிறுவனம், தனது 126 ஆண்டுகால பாரம்பரியத்தையும் கைவினைத் திறனையும் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.

'சிட்டுக்குறிஞ்சி' திரைப்படம் 27 நவம்பர் 2026 அன்று திரையரங்குகளில் வெளியாகத் தயாராகிறது, படத்திலிருந்து பிரத்யேகமான "தேங்க்ஸ்" டீஸர் மூலமாக

சென்னை – 3 நவம்பர், 2026 'சிட்டுக்குறிஞ்சி' திரைப்படம் 27 நவம்பர் 2026 அன்று திரையரங்குகளில் வெளியாகத் தயாராகிறது, படத்திலிருந்து பிரத்யேகமான "தேங்க்ஸ்" டீஸர் மூலமாக வெளியீட்டுத் தேதியை அறிவித்தது படத்தயாரிப்பு நிறுவனம்! வரவிருக்கும் தமிழ் "ஃபீல்-குட்" காதல், பேண்டஸி திரைப்படமான 'சிட்டுக்குறிஞ்சி', 27 நவம்பர் 2026 அன்று உலகம் முழுவதும் உள்ள உங்கள் அபிமான திரையரங்குகளில் வெளியாகும் எனப் படத்தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்புக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில், படத்தின் இசை மற்றும் சினிமா போஸ்ட்டர்களுக்கு ரசிகர்கள் அளித்த அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக, படத்திலிருந்து பிரத்யேகமான "தேங்க்ஸ்" டீஸரை படதயாரிப்பு நிறுவனம் வெளியிட்டுள்ளது. திரைப்படத்தின் முதல் பாடலான 'குறிஞ்சி மலை மேல' யூடியூபில் 1.8 மில்லியன் பார்வைகளைக் கடந்து, இசை ரசிகர்களிடமிருந்து சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது. ரம்யா நம்பீசன் பாடியுள்ள இந்த உற்சாகமான திருமணப் பாடலுக்குகு. கார்த்திக் பாடல் வரிகளை எழுதியுள்ளார். அறிமுக இசையமைப்பாளர் மாறா இசையமைத்துள்ளார். மாறா எழுதி ஷில்வி ஷரோன் உடன் இணைந்து பாடிய இரண்டாவது பாடலான 'உள்ளார' பாடலும் ஒரு மில்லியன் பார்வைகளை கடந்து நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. அறிமுக இயக்குநர் வீ.ஜெ. மீனாட்சி சுந்தரம் எழுதி இயக்கியுள்ள 'சிட்டுக்குறிஞ்சி', பிளாக் அண்ட் ஒயிட் மீடியா சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் தயாரித்துள்ளது. இத்திரைப்படம் காதல், நகைச்சுவை மற்றும் பேண்டஸி கலந்த தனித்துவமான எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில், இப்படத்தின் டப்பிங் பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்ததாகப் படத்தயாரிப்பு நிறுவனம் அறிவித்திருந்தது. இப்படத்தில் ரஜித் மேனன் கதாநாயகனாக நடிக்க, தீப்ஷிகா, நக்ஷா சரண் மற்றும் ஸ்ரீராம் கார்த்திக் ஆகியோர் உடன் நடித்துள்ளனர். 1983 ஆம் ஆண்டு காலகட்டத்தை உண்மைத்தன்மையுடன் மீண்டும் உருவாக்குவதற்காக, கொடைக்கானலில் உள்ள இயற்கை எழில் சூழ்ந்த மலைச்சரிவுகளில், கிட்டத்தட்ட 80 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமான கிராமத்தையே படக்குழு அமைத்து படமாக்கப்பட்டது. திரைப்படத்தின் இசை ரசனையை மேலும் உயர்த்தும் வகையில், இதன் பின்னணி இசை, ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் உள்ள புகழ்பெற்ற புடாபெஸ்ட் ஸ்கோரிங் கம்பெனி ஸ்டுடியோவில், சர்வதேச அளவில் புகழ்பெற்ற இசைக் கலைஞர்கள் இடம்பெற்ற நேரடி இசைக்குழுவுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்திரைப்படத்தின் ஒளிப்பதிவை பிரான்சிஸ் ராஜ்குமார் ஆ மேற்க்கொள்ள. மகேந்திரன் கணேசன் படத்தொகுப்பு பணிகளையும், கலை இயக்கம் ராம்ஜி, மாஸ்டர் தீனா நடன இயக்குனுராகவும் பணியாற்றியுள்ளனர். பிளாக் அண்ட் ஒயிட் மீடியா சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் டி. ஜூட் ஆனந்த் இப்படத்தைத் தயாரித்துள்ளார் மற்றும் ராஜேஷ் ஆர், டாக்டர் கே. எஸ். செந்தில் (சசிராம் பிக்ஸர்ஸ்) மற்றும் கடையநேந்தல் ஆர். ஏ. பீட்டர் ஆகியோர் இணைத் தயாரிப்பாளராக இணைந்துள்ளனர். சிட்டுக்குறிஞ்சி' திரைப்படம் 27 நவம்பர் 2026 அன்று உங்கள் அபிமான உள்ள திரையரங்குகளில் ஷாலினி சினி கிரியேஷன்ஸ் வெளியிடுகிறது.



நட்சத்திரப் பட்டாளம்: ரஜித் மேனன், ஸ்ரீராம் கார்த்திக், தீப்ஷிகா, நக்ஷா சரண், வீ.ஜே. பப்பு, ஜி. எம். குமார், தோழர் எல். வி. ஆதவன், ராம்ஸ், ஹலோ கந்தசாமி, தேனி முருகன், சுஜாதா, கராத்தே ராஜா, அட்வகேட் பாபு ஈஸ்வர்பாபு, மஞ்சு தொழில்நுட்பக் குழு: எழுத்து & இயக்கம்: வீஜே மீனாட்சி சுந்தரம் தயாரிப்பு: பிளாக் அண்ட் ஒயிட் மீடியா சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் தயாரிப்பாளர்: டி. ஜூட் ஆனந்த் இணை தயாரிப்பாளர்கள்: ஆர் ராஜேஷ், டாக்டர் கே. எஸ். செந்தில் (சசிராம் பிக்சர்ஸ்), கடையநேந்தல் ஆர். ஏ. பீட்டர் இசை: மாறா ஒளிப்பதிவு: பிரான்சிஸ் ராஜ்குமார் ஆ படத்தொகுப்பு: மகேந்திரன் கணேசன் கலை இயக்கம்: ராம்ஜி நடன இயக்கம்: தீனா ஒலி வடிவமைப்பு: டோனி ஜே SFX: கிஷோர் காமராஜ் Foley: தினேஷ் நாராயணன் டப்பிங்: மொகமத் ரிஸ்வான் VFX: ஜீவரத்தினம் ஆர் ஆடை வடிவமைப்பு: ஹரிவர்தனி காஸ்ட்யூமர்: எஸ்.பி. சுகுமார் மேக்கப்: வேல்முருகன் விளம்பர வடிவமைப்பு: தமிழ்ச்செழியன் ஸ்டில்ஸ்: அஜய் எக்ஸிகியூட்டிவ் புரொட்யூசர்: என். குழந்தைவேலு (மஞ்சு சினி எக்யூப்மென்ட்ஸ்) லைன் புரொட்யூசர்: குருவேல் கார்த்திக் புரொடக்ஷன் மேனஜர்: A V பழனிசாமி மக்கள் தொடர்பு: ரியாஸ் K அஹ்மத், பாரஸ் ரியாஸ் டிஜிட்டல் மார்க்கெட்டிங்: ஏ. எஸ். பக்தீஸ்வரன், ஆர். ஜெ. முகமது ரஃபி மீரான், ஸ்ரீநிதி பக்தீஸ்வரன் டிஜிட்டல் பார்ட்னர்ஸ்: Uyire Media, Infinity Plus Digital Media, Cinemax ஆடியோ உரிமை: Saregama India Ltd. (RPSG Group) வெளியீடு: ஷாலினி சினி கிரியேஷன்ஸ்



கொடுங்கையூர் பகுதியில் சாலையில் பட்டாசு வெடித்து, காயம் ஏற்படுத்தி, பெண்ணிடம் தகாத வார்த்தைகள் பேசிய சரித்திர பதிவேடு குற்றவாளி கைது



சென்னை – 3 நவம்பர், 2026

சென்னை, கொடுங்கையூர் பகுதியில் கணவர் மற்றும் குழந்தைகளுடன் வசித்து வரும் 27 வயது பெண் ஒருவர், கடந்த 31.10.2026 அன்று மாலை, அவரது மகளுடன் இருசக்கர வாகனத்தில் கொடுங்கையூர், ஆர்.ஆர் நகர், மாதா கோவில் அருகே சென்று கொண்டிருந்தபோது, அங்கு ஒரு நபர் பட்டாசு வெடித்து வீசியபோது, இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த மேற்படி பெண் மற்றும் அவரது குழந்தையின் மீது பட்டு, இருவருக்கும் தீக்காயம் ஏற்பட்டதாகவும், இது குறித்து அப்பெண், மேற்படி நபரிடம் ‘‘எதற்காக இப்படி ரோட்டில் பட்டாசு வெடிக்கிறாய்?’’ என்று கேட்டபோது, அந்த நபர், தகாத வார்த்தைகள் பேசி, அப்பெண்ணை திட்டியதாகவும், பின்னர் அங்கு கூட்டம் கூடவே, மேற்படி நபர் அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும், எனவே ரோட்டில் பட்டாசு வெடித்து, காயம் ஏற்படுத்தி, தகாத வார்த்தைகள் பேசிய மேற்படி நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட 27 வயது பெண், P-6 கொடுங்கையூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (BNS) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் (TNPHW) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

P-6 கொடுங்கையூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி சசிகுமார், வ/33, ஆர்.ஆர் நகர், கொடுங்கையூர், சென்னை என்பவரை நேற்று (01.11.2026) கைது செய்தனர்.

P-6 கொடுங்கையூர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளியான எதிரி சசிகுமார் மீது ஏற்கனவே 1 கொலைமுயற்சி உட்பட 15 குற்ற வழக்குகள் உள்ளது.

கைது செய்யப்பட்ட எதிரி சசிகுமார் என்பவர் விசாரணைக்குப் பிறகு நேற்று (01.11.2026) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

******

துரைப்பாக்கம் பகுதியில் 2 ஆண்கள் விடுதிகளில் லேப்டாப்களை திருடிய காவலாளி கைது. 3 லேப்டாப்கள் மீட்பு



சென்னை – 3 நவம்பர், 2026

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மணிகண்டன், வ/28 என்பவர், சென்னை பெருங்குடி, சிபிஐ காலனியில் உள்ள ஆண்கள் விடுதியில் தங்கி, தனியார் நிறுவனத்தில் என்ஜினியராக வேலை செய்து வருவதாகவும், இவர் கடந்த 26.06.2026 அன்று காலை மேற்படி விடுதி அறையை பூட்டிவிட்டு, சாவியை வழக்கம்போல கதவின் அருகிலுள்ள மறைவான இடத்தில் வைத்துவிட்டு வேலைக்கு சென்று பின்னர் மாலை விடுதிக்கு வந்து அறையை திறந்து பார்த்தபோது, அறையில் வைத்திருந்த அவரது லேப்டாப், டிராலி பேக் மற்றும் அவருடன் தங்கியிருந்த நபரின் லேப்டாப் திருடு போனதாகவும், இதே போல மற்றொரு வழக்கில் துரைப்பாக்கம், பார்த்தசாரதி நகரிலுள்ள ஒரு ஆண்கள் விடுதியில் தங்கியிருந்த விஜய், வ/21 என்பவர் 31.10.2026 அன்று இரவு அவரது அறையை பூட்டாமல் தாழிட்டு உணவு சாப்பிடச் சென்று சிறிது நேரம் கழித்து அவரது அறைக்கு வந்து பார்த்தபோது, அவர் அறையில் வைத்திருந்த லேப்டாப் மற்றும் நண்பரின் செல்போன் ஆகியவை திருடு போயிருந்தது தெரியவந்ததாகவும், மேற்படி புகார்தாரர்கள் மணிகண்டன் மற்றும் விஜய் ஆகியோர் J-9 துரைப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகார்கள் மீது 2 வழக்குகள் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

J-9 துரைப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடங்களிலும் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டில் ஈடுபட்ட எதிரி பிகாஸ் சேதி, வ/33, பாலேஸ்வரி, ஒடிசா மாநிலம் என்பவரை நேற்று (01.11.2026) கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரர்களின் 3 லேப்டாப்கள் மீட்கப்பட்டது.

விசாரணையில் எதிரி பிகாஸ் சேதி, புகார்தாரர் விஜய் தங்கியிருந்த துரைப்பாக்கம், பார்த்தசாரதி நகரிலுள்ள ஆண்கள் விடுதியில் காவலாளியாக வேலை செய்து வருவது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி பிகாஸ் சேதி விசாரணைக்குப் பின்னர் நேற்று (01.11.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

***

அக்டோபர் மாத GST வருவாய் வளர்ச்சி தேசிய சராசரியை விட மிகக் குறைவாக இருப்பதாக வரும் செய்தி மிகுந்த கவலை அளிக்கிறது: எடப்பாடி பழனிசாமி



சென்னை – 3 நவம்பர், 2026

தமிழ்நாட்டின் அக்டோபர் மாத GST வருவாய் வளர்ச்சி வெறும் 3% ஆக, தேசிய சராசரியை விட மிகக் குறைவாக இருப்பதாக வரும் செய்தி மிகுந்த கவலை அளிக்கிறது என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; "தமிழகத்தின் அக்டோபர் மாத GST வருவாய் வளர்ச்சி வெறும் 3%-ஆக, தேசிய சராசரியை விட மிகக் குறைவாக இருப்பதாக வரும் செய்தி மிகுந்த கவலை அளிக்கிறது.

ஒருபுறம், தமிழகத்தின் விலைவாசி உயர்வு தேசிய சராசரியை விட அதிகமாகி, மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.

மறுபுறம், நமக்கு வர வேண்டிய தொழில் முதலீடுகள் எல்லாம் ஆந்திர மாநிலத்திற்கு சென்றுக் கொண்டிருக்கின்றன. இன்று கூட, 3 தென்கொரிய நிறுவனங்கள் தங்கள் 1614 கோடி ரூபாய் முதலீட்டை தமிழ்நாட்டை நிராகரித்துவிட்டு ஆந்திர மாநிலத்திற்கு சென்றுவிட்டதாக செய்திகள் வருகின்றன.

திருமலை படத்தில், விஜய் “Take Diversion “ என்று நடிகர் விவேக்கை திருப்பதியில் இறக்கி விடுவதைப் போல, தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய தொழில்களை எல்லாம் “Take Diversion” என்று ஆந்திர மாநிலத்திற்கு தாரை வார்த்துக் கொண்டிருக்கிறது இன்றைய தவெக அரசு.

தொழில் வளம் பெருகி, பல வேலைவாய்ப்புகள் வந்து, அதனால் GDP முன்னேறி, Per Capita Income உயர்ந்தால் தானே, GST வருவாய் அதிகரிக்கும்? தொழில் வளம் எல்லாம் மற்ற மாநிலங்களிடம் தாரை வார்த்துவிட்டு, மக்களுக்கு “Purchasing Power” இல்லாமல் போனால் எப்படி GST வருவாய் உயரும்?

இதையெல்லாம் சொல்லிப் புரிய வைக்கும் ஆட்சியா இன்றைக்கு இருக்கிறது? இந்த லட்சணத்தை சுட்டிக் காட்டினால் இன்றைய ஆட்சியாளர்களுக்கு கோபம் வேறு வருகிறது.

தமிழ்நாட்டின் எதிர்கால தொழில்வளத்தைக் கட்டமைக்க ஜெயலலிதா துவக்கிய தமிழ்நாடு வழிகாட்டுதல் அமைப்பை கெடுத்து குட்டிச்சுவர் ஆக்கி இருக்கிறது இன்றைய ஆச்சரியக்குறி அரசு. குரங்கின் கையில் கிடைத்த பூமாலை போல இந்த கூட்டத்திடம் தமிழகத்தில் நிர்வாகம் மாட்டிக் கொண்டு படும் பாடு, வரலாற்றுச் சோகம்!

தேர்வுக்கு ஒரு வார்த்தை கூட படிக்காமல், இவ்வளவு ஏன், என்ன Subject என்றே தெரியாமல், தேர்வு நாள் அன்று Question Paper-ஐ பார்த்தால் பதில் வந்துவிடுமா? உங்களுக்கு தான் கேள்வியே என்னவென்று தெரியாதே..!!

அதேபோல், எந்த துறை பற்றியும் தெரியாமல், நிர்வாகம் பற்றி கொஞ்சம் கூட புரிதல் இல்லாமல், ரீல்ஸ் காண்பித்து முதல்வராகி விட்டால் மட்டும் எல்லாம் தானாக நடந்துவிடுமா முதலமைச்சர் அவர்களே?

தமிழ்நாட்டிற்கென்று ஒரு வளர்ச்சிப் பாதையை கஷ்டப்பட்டு கட்டமைத்து, அந்த வளமான பாதையில் பயணிக்கச் செய்திருக்கிறோம். அதை பாழாக்கி விடாதீர்கள்!" என தெரிவித்துள்ளார்.

Oasis Grace
Engineering Projects Pvt Ltd

Build Your Future With Us

RTN.DR.R.SATHYANARAYANAN, Director - Business Development
+91 9360136897 / +91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in | business@jmrgroup.org



